# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X

ARAN International e-Journal of Tamil Research



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :27 July 2025
கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

International e Journal of Tamil Research



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head,  Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை**
**முனைவர் இரா.ஜெய்சங்கர்**

**புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்**
**முனைவர் அ.சேமலா வசந்தா**

**ஐங்குறுநூற்றில் பாணர்**
**தே. சுதா**

**தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்**
**க.சுவாதி**

**சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்**
**ஏ. தீபா**

**சிலம்பில் இயற்கை**
**க. மங்கையர்க்கரசி**

**மணிமேகலையில் மனிதநேயம்**
**பெ. ஜோதி,**

**இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு**
**முனைவர் ஏ.சித்ரா**

**பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்**
**முனைவர் கி.சரண்யா**

**ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்**
**கு. சிந்து**

**பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை**
**ம. துர்க்காதேவி**

**ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்**
**முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை**

**வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்**
**முனைவர். நா. ஹேமமாலதி**



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்

**சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்**
சி.ஆர்த்தி

**தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை**
பி.தீபாவதி

**கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு**
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

**உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்**
ந.ஸ்டாலின்

**தமிழ்த் திரை இசைப் பாடல்கள்**
கார்த்திக் க

**நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்**
ஜென்சி வை கி

**இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்**
சே. வனிதா

**Historical And Archaeological Impact Of Palayarai**
Dr.S.Neelavathy

**Chola's Temples As A Social Organization**
A Study - S. Mala

**A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple**
M. Amirthavalli

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்

## *Valluvar's moral code of life*

***Dr. N.Hemamalathi**, HOD & Associate professor of Tamil, Saradha Gangadharan college, velrampet Puducherry-605004.*

***Abstract:***

*The life values that Valluvar preaches are related to society for men and to maintaining the home for women.The path of life shown by Valluvar is that a woman should be submissive and a man should not be afraid. Those who act according to their wife's wishes will not achieve the benefits of life. It Is a great shame. It is embarrassing to go among good people. There is no afterlife. There is no victory. A woman who is more modest than a boy is better at listening to her. He criticizes her for being foolish and listening to her. Women always list the basics of living dependent on men. The virtues for women are not defined by women. The woman fears social exclusion from this morality set by men and eventually becomes accustomed to it and tries to live by it. In the Thirukkural, amidst the songs that expound on moral principles, it attempts to point out and explain songs that insist on female chastity and the ideology that the husband is like God.*

***Key words:***

*Thirukkural, virtue, stupidity, shyness, patriarchy, modesty, Slavery and moral principles.*

**முனைவர். நா. ஹேமமாலதி**, இணைப்பேராசிரியர் & தமிழ்த் துறைத் தலைவர், சாரதா கங்காதரன் கல்லூரி, புதுச்சேரி — 605 004.

**ஆய்வுச் சுருக்கம்:**

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறங்கள் ஆண்களுக்குச் சமுதாயம் சார்ந்ததாகவும், பெண்களைப் பொருத்தவரை இல்லறம் பேணுதலாகவும் இருக்கிறது. பெண் அடங்கி நடப்பவள் ஆகவும் ஆண் அஞ்சாமல் இருக்க வேண்டும் என்பதும் வள்ளுவர் காட்டும் வாழ்க்கை பாதை. மனைவியின் விருப்பப்படி நடப்பவர்கள் வாழ்க்கையின் பயனை அடைய மாட்டார்கள். பெரிய அவமானமாகும். நல்லவர்கள் மத்தியில் போவதற்கே கூச்சமுண்டாகும். மறுமை என்ற பிறவி கிடையாது. வெற்றி கிட்டாது. அவள் சொல் கேட்பது ஆண்

பிள்ளையை விட நாணமுள்ள பெண்ணே சிறப்புடையவள். மனைவியின் பேச்சைக் கேட்டுச் செய்வது மூடத்தனம் என்று சாடுகிறார். பெண் எப்பொழுதும் ஆணைச் சார்ந்து வாழ்வதற்கான அடிப்படைகளையும் பட்டியலிடுகிறார். பெண்களுக்கான அறம் பெண்களால் வகுத்துக் கூறப்படவில்லை. அப்பெண் ஆண்களால் வகுக்கப்பட்ட இந்த அறத்தை சமூக விலக்கிற்கு அஞ்சி இறுதியில் அதற்குப் பழக்கப்பட்டுப் போய் வாழ முற்படுகிறாள். திருக்குறளில் அறக்கருத்துக்களைக் கூறும் பாடல்களுக்கு இடையில், பெண் கற்பையும், கணவனே கடவுளைப் போன்றவன் என்ற கருத்தியலையும் வற்புறுத்தும் பாடல்கள் சுட்டிக்காட்டி விளக்க முற்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** திருக்குறள் ,அறம், மூடத்தனம், கூச்சம், நாணம், ஆணாதிக்கம் அடிமைத்தனம், அறக்கருத்துகள்.

**முன்னுரை:**

தலையாய தமிழ் மொழிக்கு அரணாக விளங்குவது திருக்குறள். அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, உலகவியலுக்கு உகந்த நூலாக விளங்குகின்றது. மனிதப் பண்புகளையும் அதனை நேர்த்தி செய்து சிறந்தோங்குவதற்கான வழிமுறைகளையும் மொழிவதாக திருக்குறள் கட்டமைக்கப்பட்டுள்ளது. அறத்தின் மேன்மையினை திருக்குறள் புலப்படுத்தும் மகளிர் நிலையினை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

திருக்குறளில் பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்ற விதிமுறைகளுக்கு நடுவே பெண் கற்பினை வலியுறுத்தும் பாடல்கள் மிகுந்துள்ளன.

கற்பு சொல் தவறாமை; கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் சம்பந்தப்பட்டது அறிவில்லாதது, உறுதியுடையது. கற்பு என்ற நிலைக்கு கணவனைக் கடவுளாகக் கொண்டவள். கணவனைத் தவிர வேறு யாரையும் கருதாதவள் என பொருள் கொள்ளப்பட்டு இருக்கிறது. கற்பு ஆணுக்கென்றோ, பெண்ணுக்கு என்றோ சொல்லாமல் பொதுவாக மனிதச் சமூகத்திற்கே எந்த விதமான ஆண், பெண் புணர்ச்சிக்கு சிறிதும் இடமில்லாத பரிசுத்தத் தன்மைக்கு உபயோகப்படுத்தி இருக்கிறது என்பதைக் காணலாம்.

**வாழ்க்கைப்பாதை:**

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறங்களில் ஆண்களுக்குச் சமுதாயம் சார்ந்ததாகவும் பெண்களைப் பொருத்தவரை அது இல்லறம் பேணுதலாகவும் இருக்கிறது. பெண் அடங்கி நடப்பவளாகவும் ஆண் அஞ்சாமல் இருக்க வேண்டும் என்பதும் வள்ளுவர் காட்டும் வாழ்க்கைப் பாதையாக இருக்கின்றது.

உண்மையிலேயே பெண்களுக்கு விடுதலை வேண்டுமானால், பெண்ணுக்கு மட்டும் நீதி வழங்கும் நிர்பந்தக் கற்புமுறை ஒழிந்து ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் சமமான கற்பு முறை ஏற்பட வேண்டும். கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மை அன்பை, காதலை மறைத்துக் கொண்டு காதலும், அன்பும் இல்லாத கணவனுடன் இருக்க வேண்டும் என்ற சமூகக் கொடுமையும் அழிய வேண்டும். இக்கொடுமை நீங்கின இடத்தில் உறுதியான கற்பை, உண்மையானக் கற்பை, இயற்கைக் கற்பை, சுதந்திரக் கற்பை காணலாம்.

நாகரிகத்தின் மேன்மையை வெளிப்படுத்துவதாக தமிழர் திருமணங்கள் அமைந்திருக்கின்றன. உலகில் ஆதி காலத்தே திருமணத்திற்கென ஒரு வரையறை வைத்து வாழ்ந்தவர்கள் தமிழ்ச் சமுதாய மக்கள் என்றால் அது மிகையல்ல. தமிழர் வாழ்வில் அனைத்து மக்களும் ஒழுக்கத்தோடும் நெறியோடும் வாழ்வதற்குப் பலவிதச் சமூகக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் திருமணம். திருமணத்தின் அடிப்படையில் ஆண், பெண் ஆகிய இருவரும் மனம் உவந்து ஒழுக்க நெறிமுறைகளுடன் நடத்தும் இல்லறமே வாழ்க்கையாகும்.

**திருமண வாழ்க்கையில் அறம்போற்றுதல்:**

புராண இதிகாசக் காலங்களில் இருந்து இக்காலம் வரையிலும் பல்வேறு திருமண முறைகள் சமுதாயத்தினரால் பின்பற்றப்பட்டு வருகின்றன. புராண காலத்தில் காந்தர்வ முறையிலும் , இராமாயண காலத்தில் போட்டியிட்டு வெல்லும் முறையிலும், நளன் காலத்தில் சுயம்வர முறையிலும், சங்க காலத்தில் காதல் முறையிலும், திருமணங்கள் நடைபெற்றன. இன்றைய காலகட்டத்தில் சான்றோர் முன்னிலையில் பெற்றோர் ஏற்பாடு செய்யும் திருமணங்களும் உடன் போக்கு திருமணங்களும் நடைபெற்று வருகின்றன. எந்த வகைத் திருமணமும் ஓர் ஆண் மற்றும் பெண்ணின் இல்லறத் தொடக்கத்தை முறைப்படுத்தி மக்களை மக்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதே அதன் முதன்மைச் சிறப்பாகும்.

இத்தகைய திருமணம் குறித்து நன்கு அறிந்த வள்ளுவர் கூறும் முறையினை நோக்கினால், மனைவியின் விருப்பப்படி நடப்பவர்கள் வாழ்க்கையில் சிறந்த பயன்களை அடைய மாட்டார்கள். (திருக்குறள், பெண்வழிச் சேரல், குறல் எண்: 901) மனைவி சொன்னதை எல்லாம் சொன்னபடி செய்ய விரும்புகிறவனுடைய வாழ்க்கை, பெரிய அவமானம் முள்ளதாகிவிடும். (திருக்குறள், பெண்வழிச் சேரல் குறள் எண்: 902) மனைவிக்குக் கீழ்ப்படிகிற முறைகெட்ட தன்மை, நல்லவர்கள் மத்தியில் போவதற்கே கூச்சமுண்டாகும். (திருக்குறள், பெண்வழிச் சேரல் குறள் எண்: 903) மனைவிக்கு அஞ்சுபவனுக்கு மறுமை கிடையாது அவனுக்கு வெற்றியும் கிட்டாது. (திருக்குறள், பெண் வழிச் சேரல், குறள் எண்: 904)

பெண்ணின் கட்டளைக்கு அடங்கி அவள் சொன்னபடி செய்து வாழும் ஆண் பிள்ளையை விட நாணமுள்ள பெண்ணே சிறப்புடையவள். என்பதை,

“பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் நாணுடைப்

பெண்ணே பெருமை உடைத்து” (திருக்குறள், பெண்வழிச் சேரல், குறல் எண்: 907) என்னும் குறளில் விளக்குகிறார். அறிவின் ஆலோசனையுடன் மனோதிடமும் இருக்க வேண்டிய ஆண் மக்களுக்கு மனைவியின் பேச்சைக் கேட்டுத்தான் எதையும் செய்வது என்ற மூடத்தனம் இருக்கக் கூடாது. (திருக்குறள், பெண் வழிச் சேரல், குறல் எண்: 910) என்று அவர் பெண்களுக்கான அறங்களை வகுத்திருக்கிறார்.

இதில் ஆண் பெண் திருமணத்தில் பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது என்பதைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. பெண்கள் இயற்கைக்கு விரோதமான நிர்பந்தத்துடன் நடத்தப்படுகிறார்கள் என்பதை நடுநிலைமையுள்ள எவரும் மறுக்க முடியாது. இக்கொடுமைகள் இனியும் இப்படியே நிலைபெற்று வருமானால், கல்யாணச் சடங்கும், சொந்தமும் உலகில் அனேகமாய் மறைந்தே போகும். பெண்கள் கொடுமையை நாளுக்கு நாள் தளர்த்திக் கொண்டே வருகின்றார்கள். பெண்களுக்கும், ஆண்களுக்கும் கல்யாண ரத்து செய்து கொள்ள உரிமை இருக்க வேண்டும் என்றவொரு தீர்மானம் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. “ஏதோ கல்யாணம் ஒன்றைச் செய்து கொண்டோமே அது எப்படி இருந்தாலும் சகித்துக் கொண்டே தான் இருக்க வேண்டும்”. (பெண் ஏன் அடிமையானாள், ப.21) என்று கருதாமல், பெண் உலகம் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் மனிதத் தன்மையும், மனித உரிமையும், சுயமரியாதையும் ஏற்பட வேண்டுமானால் ஆண்களுக்கு இன்பமும், உண்மையானக் காதலும், ஒழுக்கமும் ஏற்பட வேண்டுமானால் திருமண ரத்துக்கு இடமளிக்க வேண்டியது முக்கியமான ஒன்றாகும். அப்படி இல்லாதவரை ஆண் - பெண் இருவருக்கும் எண்மை இன்பத்திற்கும், சுதந்திர வாழ்க்கைக்கும் இடமே இல்லாமல் போய்விடும். ( இரா. சூர்யா, பெரியாரின் கருத்தியலில் பெண் அடிமைத்தனமும், பெண் விடுதலையும், ப. 315).

மேலும், பெண்கள் திருமணமாகி ஓராண்டிற்குள் குழந்தைப் பேற்றினைப் பெற வேண்டும் என்பது அனைவராலும் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு நிகழவில்லை எனில் அப்பெண்ணை பிற மக்கள் மற்றும் உறவுகள் இழிவாக எண்ணுகின்றனர். அவர்களை விட இல்லறத்தில் தன்னை அறிந்து செயல்பட வேண்டிய கணவன்மார்கள் கூட இழிவாகவே எண்ணுகிறான். அப்பெண் சமூகத்தினரால் புறந்தள்ளப்படுகிறாள். பெண்ணாகப் பிறந்தாலும் தாயாக வேண்டும் என்பது சமுதாயக் கண்ணோட்டமாகவே உள்ளது.

**சமுதாய வெளிப்பாட்டில் ஆணாதிக்கம்:**

சில இடங்களில் பெற்றோர்கள் மகளின் நலனைக் கருத்தில் கொண்டு வயதான ஒருவருக்கு மணம் முடிக்கவும் எண்ணுகின்றனர். தன்னுடைய எதிர்காலம் எப்படி எல்லாம் அமைய வேண்டும் என அழகாக எண்ணிக் கொண்டிருக்கும் பெண்ணை பெற்றோர்கள் முதியவரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கட்டாயப்படுத்துவர். அத் திருமணத்தை மறுக்கும் பெண், தங்களின் வாழ்க்கையை கனவில் எவ்வாறெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பெண் வயது முதிர்ந்தவரோடும், தன்னைவிட இளைய வயதினரோடும் திருமணம் நடைபெறுகின்றபோது வேறு வழி இல்லாமல் வாழ்க்கையைக் கழிக்கின்றனர். இதனால் கணவன், மனைவி இருவரிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றி அவ் வாழ்க்கை மணமுறிவில் முடிகின்றது. இதற்கு ஓர் முக்கிய காரணம் சமுதாயம் தவறாகப் பேசுமே என நினைத்து சில பெற்றோர்கள் இவ்வாறான திருமணங்களை நிகழ்த்துவது தான்.

ஒரு பெண் அழகுடையவளாகவும், கணவன் விருப்பத்திற்கேற்ப புனைவு செய்து கொள்பவளாகவும், அச்சம் உடையவளாகவும், பிற ஆடவர்க்கு நாணி ஒதுங்கும் இயல்பு உடையவளாகவும், கணவனிடத்தில் தேவையானபோது ஊடல் கொள்பவளாகவும் இருக்க வேண்டும். மேலும் கணவன் தம் தோள் சேரும் ஒவ்வொரு நாளும் அன்று சேருவதுபோல் புது மகிழ்ச்சி தருபவளாகவும் விளங்க வேண்டும் என்று கூறுகின்றது. வள்ளுவரின் ‘‘வாழ்க்கைத் துணைநலம்’’ என்னும் அதிகாரம் ஆணாதிக்கச் சமுதாயத்தின் வெளிப்பாடாகவே இதனை நம்மால் இனம் காண முடிகிறது.

மனிதப் பிறப்பைக் கொண்ட ஆணும், பெண்ணும் இயற்கைத் தத்துவத்திலும் சமுதாய வாழ்க்கைத் தன்மையிலும் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவர்கள் அல்ல என்பதை அறிவுடைய உலகம் மறுக்க இயலாது. பெண்கள் அடிமைத்தன்மை பெண்களை மாத்திரம் பாதிப்பதில்லை. அது மற்றொரு வகையில் ஆண்களையும் பெரிதும் பாதிக்கிறது. ஆண் - பெண் இருவருக்கும் சமமான நீதி ஏற்படுத்த வேண்டும். பெண்களும் ஆண்களைப் போலவே வாழ்க்கையில் சம உரிமையுடையவர்கள் ஆக வேண்டும். தாங்களும் ஆண்களுக்குச் சமமானவர்கள் என்றும் எவ்விதத்திலும் தாழ்ந்தவர்கள் இல்லை என்றும் கருதிக் கொண்டு தங்களுக்குத் தாங்களே பாடுபட வேண்டும். அப்பொழுதுதான் பெண்கள் அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டு சுதந்திர மக்களாக வாழ முடியும்.

வள்ளுவர் கூறுவதைப் போல கணவனைத் தொழுவதன் மூலம் மழை பெய்ய கூடிய அளவுக்கு அவள் சக்தி பெற்று விடுவாள் என்று பெண் ஆணைச் சார்ந்து வாழ்வதற்கான அடிப்படைகளை வள்ளுவர் தம் நூலில் அமைத்திருக்கின்றார் எனலாம்.

சமூகம் உருவாக்கியுள்ள இத்தகைய எண்ணங்களும் சம்பிரதாயங்களும் தான் பெண்களை ஒரு முகமாக மட்டுமே பாதிக்கின்றது. இவ்வாறான அறங்களை களைத்தெறிந்தால் பெண்களுக்கு உண்டாகும் அவல நிலையைப் போக்க முடியும். அடிமைத்தனமாக இருந்த காலத்தில் ஆணாதிக்கம் சில வரைமுறைகளை வகுத்துப் பெண் வர்கத்தினரை ஒடுக்கினர். அத்தகைய ஒடுக்கு முறைகளை மீறியெழ வேண்டும். அப்பொழுதுதான் பெண்களின் வாழ்க்கை நிலை உயர முடியும்.

பெண் அறம் பெண்களால் வகுத்துத் தரப்பட்டது அல்ல. ஆண்களால் வகுக்கப்பட்ட இந்த அறத்தை சமூக விலக்கிற்கு அஞ்சி, இறுதியில் அதற்குப் பழக்கப்பட்டுப் போய் ஏற்றவள் பெண். மேலாதிக்கப் பகுதியைச் சேர்ந்த ஆண்களுக்கு ஆண்கள் கூறிய ஆண் அறத்தில் பெண் என்பவள் எழுவாயாக இல்லை. செயல்படு பொருளாகத்தான் இடம்பெறுகிறாள் என்று ஃபூக்கோ கூறுவது இங்கே நினைவு கூறத் தக்கது" (ராஜ் கவுதமன், அறம் அதிகாரம்,ப.1 59)

**முடிவுரை:**

சங்கம் மருவிய கால இலக்கியமான திருக்குறளில் அறக்கருத்துக்களைக் கூறும் பாடல்களுக்கிடையில் பெண் கற்பையும், கணவனே கடவுளைப் போன்றவன் என்னும் கருத்தியலை யுகம் வற்புறுத்தும் பாடல்கள் மிகுதியாக இருந்திருக்கின்றன எனவும், "அச்சமும் நாணும் மடனும் முந்துதல் பெண்பாற்குரிய" ( தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், நூற்பா.8) எனப் பெண்ணின் இயல்பை வரையறுக்கின்றார் தொல்காப்பியர். இது பெண்ணடிமை குறித்த கருத்துத் தானே!. "பெருமையும் உடனும் ஆடுஉமேன" என்கிறார். ( தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல் நூற்பா: 7) அதாவது ஆண்மகன் உன்னுடையவனாக, பெருமைக்குரியவனாக காட்டப்படுகிறார். இங்கிருந்து தான் பெண்ணடிமை கருத்து உருவாக்கியிருக்கும் எனலாம். கற்பு என்பதற்கு விளக்கம் கொடுக்க வந்த நச்சினார்க்கினியர் " பெற்றோரும் கொண்டாடும் கற்பித்த வழி ஒழுகுதல்" ( தொல்காப்பியம் நூற்பா — 51) என்ற உரை மேற்கூறிய கருத்துக்களுக்கே துணை செல்கிறது. "பெண் என்பவள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறாள்" என்ற சமூகப் பார்வை தேவை. உடலளவில் பெண்மைக்கு மட்டும் பேசப்பட்டு வந்த கற்பனை உள்ளத்தில் ஆணுக்கும் உண்டு என்று கூறியது புதுமை தான். அதனினும் புதுமை "கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை" என்று கொன்றை வேந்தனில் ஔவை கூறியது அனைவருக்குமானது என்பதே திண்ணம். பெண் முன்பு இருந்த நிலையைச் சுட்டிக் காட்டி காலத்திற்கு ஏற்ப தன்னுடைய வாழ்வு எவ்வாறு மறுமலர்ச்சி சிந்தனையின் மூலம் முன்னேற்றப்பட வேண்டும் என்பதைக் கற்று உணரும்படி சொல்லப்பட்டிருந்தாலும்,

நாகரிகத்தின் வளர்ச்சியாலும் நகரமயமாக்கல் தின் விளைவாகும் தமிழரின் பாரம்பரிய மரபுகள் இன்று தடமாறிச் சென்று கொண்டிருக்கின்றன என்பதும் நம் கண்கூடு.

**துணை நின்ற நூல்கள்:**


1. அன்னிதாமசு. (பதி.,) தமிழக மகளிரியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.

2. கோபாலகிருஷ்ணமாசார்யர், வை.மு.கோ. திருக்குறள் பரிமேலழகர் உரை, வை.மு. நரசிம்மன் கம்பெனி, சென்னை, - 1965.

3. தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்? பாரதி புத்தகாலயம், சென்னை, மறுபதிப்பு, 2006.

4. தமிழ் இலக்கியங்களில் காலமும் கருத்தும் (சங்க காலம் முதல் சமகாலப் வரை) பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை, அய்யா நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி — 626 124, 2019.


*References:*


1. Anni thamasu. (Ed.,) Tamil Women's Studies, World Tamil Research Institute, Chennai, 2002.

2. Gopalakrishnamacharya, Y.M.K. Thirukkural Parimelazhagaar Uri, Y.M.K. Narasimhan Company, Chennai, - 1965.

3. Thanthai Periyar, Why is the woman a slave? Bharathi Bookstore, Chennai, reprint, 2006.

4. Time and Concept in Tamil Literature (From the Sangha Period to the Present) International Seminar Research Paper, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi — 626 124, 2019.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com